மே 15, 2015

## ஸ்மிருத்தி அல்லது நினைவு செய்ய வேண்டியது

இனிமையான குழந்தாய்: ஆத்மாக்களாகிய நீங்கள் தூய்மையற்றவர்களாக இருக்கின்றீர்கள், அதனால் தான் என்னை வந்து உங்களை தூய்மையாக்குமாறு நீங்கள் என்னை கூவி அழைத்தீர்கள். நான் இப்பொழுது கூறுகின்றேன், என்னை நினைவு செய்யுங்கள், தூய்மை ஆகுங்கள்! அனைவரும் இங்கே வந்து படிக்கமாட்டார்கள். ஒரு சக்கரத்திற்கு முன்பு படித்தவர்கள் தான் மீண்டும் வருவார்கள். இத்தகைய ஆத்மாக்கள் கூறுவார்கள்: பாபா, நாம் ஒரு சக்கரத்திற்கு முன்பு சந்தித்தோம்; நாங்கள் இங்கு படிப்பதற்காக வந்திருக்கின்றோம்; நாங்கள் நினைவு யாத்திரைப் பற்றி தெரிந்துக்கொள்ள வந்திருக்கின்றோம்.

இனிமையான பாபா, நாள் பொழுதில் இந்த விழிப்புணர்வை நான் மீண்டும் உறுதி செய்துக் கொள்கின்றேன்: நீங்கள் குழந்தைகளாகிய எங்களை தூய்மையற்றதிலிருந்து தூய்மை ஆக்குவதற்கான வழியை காட்ட வந்திருக்கின்றீர்கள். உங்களை நினைவு செய்வதன் கூடவே எங்களுடைய பாவங்கள் எரிந்துபோவதுடன், நாங்கள் இந்த பிறவியில் செய்த அனைத்து பாவங்களையும் இந்த பிறவியில் செய்த அனைத்து புண்ணியங்களையும் தான தர்மங்களையும் ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும்.

## சமார்த்தி அல்லது சக்தி

நான் தொடர்ந்தும் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்மிருத்தியிலிருந்து பெறப்படும் சக்தியின் இணைப்பில் என்னை நான் வைத்திருக்கின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எனக்கு எவ்வாறு என்னுடைய சுய-மரியாதையை மீண்டும் ஆற்றல் மிக்கதாகச் செய்கின்றது என்பதைப் பற்றி நான் விழிப்படைகின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எவ்வாறு எனக்குப் பலமளிக்கின்றது, மேலும் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் உலகில், சீரான மனநிலையோடும் பொறுமையுடனும் செயல்பட என்னை அனுமதிக்கின்றது என்பதிலும் நான் கவனம் செலுத்துகின்றேன்.

## மனோ-விருத்தி அல்லது மனோபாவம்

பாபா ஆத்மாவிற்கு: உங்களுடையது எனக்கு சொந்தமாகும் மேலும் என்னுடையது உங்களுக்கு சொந்தமாகும். நீங்கள் உங்கள் உடல், மனம், மற்றும் செல்வத்தின் மூலம் என்னுடைய உதவியாளர் ஆகுங்கள். அதற்கு பிரதியுபகாரமாக, நீங்கள் இதை பெறுவீர்கள்.

நான் என்னுடைய உடல், மனம், மற்றும் செல்வத்திற்கு ஒரு நம்பிக்கை பொறுப்பாளரின் மனோபாவத்தை கொண்டிருக்க உறுதியாக இருக்கிறேன்.

## திருஷ்டி அல்லது தூய பார்வை

பாபா ஆத்மாவிற்கு: கடவுள் இந்த அற்புதமான நாடகத்தை உருவாக்குவதற்கு ஒரு ரூபத்தை ஏற்றார் என்று மக்கள் கூறுகின்றார்கள். எனவே, அவர் நிச்சயமாக ஒரு பாகத்தை நடிக்க வேண்டும். கடவுளின் ரூபத்தை பாருங்கள்! ஆத்மாவின் கண் கொண்டு அவரை பாருங்கள். புத்தியின் கண் கொண்டு அவரை அடையாளம் காணுங்கள். உங்கள் ஸ்தூல கண்களின் லென்ஸ் மூலம் அவருடைய குணங்களையும் சக்திகளையும் வெளிப்படுத்துங்கள்.

## ஒரு அலையை உருவாக்குதல்

நான் மாலை 7:00 மணி முதல் 7:30 மணி வரை தியானத்தின் போது முழு உலகையும் தூய நினைவு மற்றும் மனோபாவத்தினால் நிரப்பும் ஒரு அழகான அலையை உருவாக்கும் மன்சா சேவையை செய்வேன். நான் மேலே கொடுக்கபட்டிருக்கும் ஸ்மிருத்தி, மனோ-விருத்தி, மற்றும் திருஷ்டியின் மூலம் முழு உலகிற்கும் சாக்காஷ் கொடுப்பதிலும் ஒரு கருவியாக என்னை ஈடுபடுத்திக்கொள்வேன்.

குறிப்பு 1: சாய்வு வார்த்தைகள் அந்தநாள் முரளியிலிருந்து தொகுக்கப்பட்டவை.
குறிப்பு 2: இந்த வண்ணத்தில் இருக்கும் வார்த்தைகள் ஒவ்வொரு நாளும் மாறாமல் இருக்கும்.